**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE, KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 08 / 2020** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அ.சா. 6<br><br>Defense<br>Court |
| Name | அண்ணாதுரை |
| Father's Name | மாணிக்கம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.08.2026. | |

எதிரி - ஆஜர்

முதல் விசாரணை

நான் குள்ளரங்கம்பட்டியில் குடியிருந்து லாரி ட்ரைவராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 -ஐ எனக்கு தெரியாது. அ.சா.2-ஐ தெரியும். எதிரியை தெரியும். வழக்கு சம்பவம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊரை சேர்ந்த எட்டமநாயக்கன்பட்டி பழனிவேல் என்பவரை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 4-5 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள் தோகைமலை போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க

காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். சாட்சி இந்திரா எனது சகோதரி. சண்டை நடந்ததாகவும், அதற்காக போலீசார் கேட்க நான் கையெழுத்து போட்டேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4. கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.5. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ரெங்கதுரை என்பவரும் என்னுடன் கையெழுத்து செய்தார்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தாகவும், போலீசார் விசாரணையில் கடந்த 2019ம் ஆண்டு மே மாதம் 20ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நானும், பழனிவேல் என்பவரும் எங்களது ஊரில் இருந்ததாகவும், அப்பொழுது தோகைமலை போலீசார் வழக்கின் எதிரியான மோகன் என்பவரை கைது செய்திருப்பதாகவும், அவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பெறயிருப்பதாகவும், அதனால் எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதாகவும், அதன் அடிப்படையில் மேற்படி எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை தோகைமலை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றாலும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பழனிவேல் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி அ.சா.1 -ஐ வெட்ட பயன்படுத்திய அருவாளையும், அவர் அப்பொழுது கட்யிருந்த கைலியையும் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதனை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரி கேட்டுக்கொண்டதற்காக நடந்த சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை.

மறுவிசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி

குளித்தலை.